# கிருபையுள்ள வார்த்தை®

# KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


Vol - 24 | ஜூன் JUNE | 2023

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


## ...பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும்.

- யூதா : 3



கிருபையுள்ள வார்த்தை - 23வது குடும்ப வேதாகம முகாம், தரங்கம்பாடி


கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE**

ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 8 |
| வரலாற்றில்... | 9 |
| சிறுவர் பகுதி | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**

**Jerry Bates & Kingsly Rajah**



மே மாதம்
தரங்கம்பாடியில்
நடைபெற்ற
குடும்ப வேதாகம முகாமில்
கலந்துகொண்டு
தேவ செய்தியளித்த
போதகர்கள்.

## கிருபையுள்ள வார்த்தை

**கர்த்தருக்குள் நம்மை சீராக வழிநடத்தும் வார்த்தை.**


**World Literature Publication :** Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

# மன்னிப்பு • தோழமை • சுதந்திரம்

ஆசிரியர் உரை
Dr. P.C. பிலேமோன் ராஜா



**பிரியமானவர்களே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள். இந்த மாதம் பிலேமோன் புத்தகத்திலிருந்து சில ஆழமான கருத்துக்களை, நம் வாழ்வின் ஆசீர்வாதத்திற்கென கற்றுக்கொள்வோம்.**

சுமார் கி.பி. 60 - 62 காலகட்டத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரி சிறையில் இருந்தபோது, நான்கு கடிதங்களை எழுதினார். அதில் மூன்று எபேசு, கொலோசெ மற்றும் பிலிப்பி பட்டணங்களில் கூடிவந்த கிறிஸ்துவின் சபையாருக்கும், மற்றொன்று கொலோசெ பட்டணத்து சபையில் முன்னோடியாக இருந்த பிலேமோன் என்ற தனி நபருக்கும் எழுதப்பட்டதாகும்.

இந்த கடிதம் பிலேமோனுக்கும், அவரது வேலைக்காரனாகிய ஒநேசிமுக்கும் இடையில் சமாதானம் செய்துவைத்து, இருவரையும் ஒப்புரவாக்கும்படியாக அப்போஸ்தலனாகிய பவுலினால் எழுதப்பட்டது. இக்கடிதத்தினை பவுல், தீமோத்தேயுடன் இணைந்து எழுதுவதாக குறிப்பிடுகின்றார் **(வசனம் 1)**.

இந்த கடிதத்தில் நாம் காண்கின்ற அப்பியாள் என்பவர் பிலேமோனின் துணைவியாராகவும், அர்க்கிப்பு என்பவர் பிலேமோனின் மகனாகவும், அந்த சபையின் ஊழியக்காரனாகவும் இருந்திருக்க கூடும் என்றே நம்பப்படுகின்றது. ஆயினும் இந்த புத்தகத்திலிருந்து, பவுல், பிலேமோன் மற்றும் ஒநேசிமுவிடமிருந்து, நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை குறித்து ஆராய்ச்சி செய்வோம்.

## பிலேமோன்

**பிலே. 1:1** "கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயும், எங்களுக்குப் பிரியமுள்ளவனும் உடன் வேலையாளுமாயிருக்கிற பிலேமோனுக்கும்,"

முதலாவதாக, இந்த கடிதத்தினை பெற்றுக்கொண்டவராகிய பிலேமோனைக் குறித்து பார்ப்போம். பவுல், இவரை அறிமுகம் செய்யும்போதே, பிரியமுள்ள உடன் வேலையாள் என சொல்வதிலிருந்து, பிலேமோன், கர்த்தருடைய பணியின் மீது நாட்டமும், ஈடுபாடும் உடையவராக இருந்தார் என்பதனை நாம் நன்கு அறிய முடிகின்றது.

இவரை செல்வந்தராக அறிகின்றோம். குறிப்பாக, செருக்கு இல்லாத செல்வந்தர் என்று சொன்னால் அது தகும். ஆம், செல்வங்கள் பொதுவாக மனிதனுக்கு செருக்கை (மேட்டிமையை) உண்டாக்கி, தலைகால் புரியாமல் அவர்களை ஆட வைக்கும். ஆனால், பிலேமோனை, செருக்கற்ற செல்வந்தராக அறிய முடிகின்றது. ஏனெனில் தானாக கர்த்தருடைய வேலையை செய்கின்றவராக இருந்திருக்கின்றார். அதனால் தான், உடன் வேலையாள் என அன்புடன் பவுலினால் அழைக்கப்பட்டார். நிறைய பேர், தங்கள் செல்வத்திலிருந்து எதையாவது கொடுத்துவிட்டால் தங்கள் பங்கு முடிந்துவிட்டது என நினைக்கின்றார். நம் ஞானம், கல்வி, செல்வம் எல்லாம் கர்த்தருக்கு முன்பாக குப்பையாக இருக்கின்றது என்ற உணர்வுள்ளவர்களால் தான். தங்களுடைய வருமானததிலிருந்து கர்த்தருக்கு கொடுப்பது மட்டும் இன்றி, நில்லாமல், தங்கள் உழைப்பையும் கொடுக்க முடியும். அதாவது, நற்செய்தி அறிவித்தலை யாரோ ஒருவர் செய்யட்டும் என அமைதியாக ஒதுங்கிவிடாமல், தினமும் ஆண்டவரின் நற்செய்தியை பரப்புகின்றவராக இருக்க வேண்டும். சபை கூடுமிடங்கள் சுத்தமின்றி இருந்தால், அதனை கண்டு காணதவராகவோ, குறைசொல்பவராகவோ இல்லாமல், தானே சுத்தம் செய்ய முன்வர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு குணத்தினை தான் நாம் பிலேமோனிடம் பார்க்கின்றோம். அதனால் தான் அவர் பிரியமுள்ள உடன் வேலையாளாக இருக்க முடிந்தது.

**பிலே. 1:2** "பிரியமுள்ள அப்பியாளுக்கும், எங்கள் உடன் போர்ச்சேவகனாகிய அர்க்கிப்புவுக்கும், உம்முடைய வீட்டிலே கூடிவருகிற சபைக்கும் எழுதுகிறதாவது:"

அடுத்ததாக, தனது செல்வத்தினை கர்த்தருடைய மகிமைக்காக (சபைக்காக) பயன்படுத்தக்கூடியவராக,

அதாவது, தன்னுடைய இல்லத்தினை சபை கூடிவர திறந்துக் கொடுத்தார் என்று அறிகின்றோம். நாம் நமது செல்வங்களை, எவ்வாறு, எதற்காக பயன்படுத்துகின்றோம்? அவைகள் நேர்மையான காரியங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றதா?

பொய் சொல்லி சம்பாதிப்பது, வரதட்சணை மற்றும் கையூட்டு (லஞ்சம்) வாங்குவது, மதுபானம் போன்றவை விற்பதினால் சம்பாதிப்பது என்பவை, நேர்மையற்ற வழியில் சம்பாதிப்பது என்பதை நாம் அறிவோம். அதைப்போலவே நேர்மையான வழியில் சம்பாதிக்கின்ற பணத்தினை வீணான களியாட்டுகளுக்காகவும், மதுபானம் போன்ற போதை பொருட்களுக்காகவும், லஞ்சம் மற்றும் வரதட்சணை கொடுப்பதற்காகவும், விபச்சாரம் மற்றும் விக்கிரக வழிபாடு ஆகியவற்றிற்காகவும் செலவழித்தல் என்பது, நேர்மையற்ற முறையில் செலவழிப்பதாகும் என்பதனை அறிய வேண்டும்.

நாம் நேர்மையான (தூய்மையான) வழியில் சம்பாதிப்பது எவ்வளவு முக்கியமோ, அதேப்போல் நேர்மையான வழியில் செலவழிப்பதும் முக்கியம். 'என் சம்பாத்தியம், என் கைபெலன் என் இஷ்டத்திற்கு என்ன வேண்டுமானாலும் செய்யலாம்' என்று நாம் நினைக்கலாம், ஆயினும் அவை எல்லாவற்றையும் குறித்து நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதனை மறந்துவிடக் கூடாது. 'எனக்கு 100 ரூபாய் வருமானம், அதில் 99 ரூபாயை காணிக்கை போட்டுவிட்டேன், மீதம் ஒரு ரூபாய் தான் இருக்கின்றது; இதனை என் விருப்பத்திற்கு பயன்படுத்திக்கொள்ளலாம், கர்த்தர் கண்டுக்கமாட்டார்' என எண்ண வேண்டாம். அந்த ஒத்த ரூபாயையும் நாம் நேர்மையான காரியங்களுக்காக செலவு செய்கின்றோமா என கர்த்தர் கவனிப்பார், மற்றும் விசாரிப்பார்.

**பிலே 1:4** "கர்த்தராகிய இயேசுவினிடத்திலும், எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலுமுள்ள உம்முடைய அன்பையும் உம்முடைய விசுவாசத்தையும் நான் கேள்விப்பட்டு,"

பிலேமோனிடம் நாம் பார்க்கின்ற அடுத்த ஒரு குணம், அவர் கர்த்தரையும் நேசித்தார், அதேப்போல் சக பரிசுத்தவான்களையும் நேசித்தார். இன்றைய நாட்களில் அநேகர் கடவுளிடம் அன்பு கூறுகின்றனர், ஆனால் அவரது சாயலில் உண்டாக்கப்பட்ட மனிதர்களிடத்தில் வெறுப்பினை காண்பிக்கின்றனர்.

இன்னும் சிலர், 'மனிதம் போற்றுவோம்' என சொல்லிக் கொண்டு மனிதர்களை மதித்து, அந்த மனிதனை படைத்த இறைவனை அவமதிக்கின்றனர். இரண்டு முறையும், மிகவும் தவறான அணுகுமுறையாகும். இரண்டுமே பிற்போக்கான சிந்தனையாகும். இப்படிப்பட்ட அணுகுமுறை, கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் இருப்பது மிகவும் கவலைக்குறியதாகவே இருக்கின்றது.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கற்பித்தப்படியே, நாம் நம்மை படைத்தவரை முழு இருதயம், மனம், ஆத்துமா மற்றும் பெலத்துடன் நேசிக்க வேண்டும். சகமனிதர்களை, நம்மை நேசிப்பது போல நேசிக்க வேண்டும். இரண்டையும் செய்ய வேண்டுமே தவிர, இரண்டில் ஒன்றை மட்டும் செய்வது பைபிள் போதனை அல்ல என்பதனை நாம் உணர வேண்டும். **(மத்தேயு 22:37-39).** பிலேமோன், ஆண்டவர் இயேசு கற்பித்தபடியே வாழக் கூடியவராக இருந்தார்.

**பிலே 1:6,7** "உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்பட வேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன். சகோதரனே, பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள் உம்மாலே இளைப்பாறினபடியால், உம்முடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்கிறோம்."

பிலேமோனிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மற்றொரு குணம், அவர் நன்மை செய்கின்றவராக இருந்தார். பைபிள், நம்மை சோர்ந்து போகாமல், பரலோக பிதாவைப் போல, நன்மை செய்யும்படி உற்சாகப்படுத்துகின்றது **(கலா 6:6-10).** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அவ்வாறே நமக்கு கட்டளையிட்டுள்ளார் **(மத்தேயு 5:16, 44-48).** ஆகையால் நம்மால் முடிந்தவரை அனைவருக்கும் நன்மை செய்கின்றவர்களாகவே இருப்போம். ஆம்! அது கர்த்தருக்கு பிரியமானதாகும். **எபிரேயர் 13:16** "அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்."

## பவுல்

பிலே 1:10 "என்னவென்றால், கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன்."

அடுத்ததாக, இந்த கடிதத்தினை எழுதியவராகிய அப்போஸ்தலனாகிய பவுலைக் குறித்து பார்க்கின்றோம். பவுல் ஒநேசிமுக்காக பிலேமோனிடம் மன்றாடுகின்றார். அதாவது, பரிந்து பேசுகின்றார்.

பிலே 1:18, 19 "அவன் உமக்கு யாதொரு அநியாயஞ் செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும். பவுலாகிய நான் இதை என் சொந்தக்கையாலே எழுதினேன், நான் அதைச் செலுத்தித் தீர்ப்பேன். நீர் உம்மைத்தாமே எனக்குக் கடனாகச் செலுத்த வேண்டுமென்று நான் உமக்குச் சொல்ல வேண்டியதில்லையே.

ஒநேசிமு செலுத்த வேண்டிய கடனை என் பேரில் வைத்துக்கொள் 'நான் அதனை உமக்கு திருப்பி செலுத்துவேன்' என்றெல்லாம் பவுல் சொல்வதை நாம் வாசிக்கும்போது, நமது கர்த்தராகிய இயேசு, பிதாவானவரிடம் பரிந்து பேசுவதைப் போல் உள்ளதல்லவா? ஏனெனில், நம்மால் செலுத்த முடியாத கடனை பாவத்திற்கான தண்டனையை நம் ஆண்டவர் இயேசு, சிலுவையில் செலுத்தி தீர்த்தார். மேலும், "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று சிலுவையில் மாத்திரமல்ல, இன்றளவும் நமக்காக பரிந்துபேசிக்கொண்டே இருக்கின்றார் அல்லவா? ஆம், நமக்காக பலியானதுமன்றி நமக்காக பரிந்தும் பேசுகின்றார். 1 யோவான் 2:1, 2 "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்."

அது மட்டுமின்றி, பாவிகளான நம்மை பிதாவானவருக்கு முன்பாக ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கியுள்ளார் (வெளி 1:6). என்ன ஒரு அன்பு! அப்படிப்பட்ட அன்புடையவராகவே பவுலும் ஒநேசிமுவுக்காக பரிந்து பேசுகின்றார். அவனை அடிமையாக அல்ல, சகோதரனாக வைத்துக்கொள் என்று அன்பினாலே மன்றாடுகிறார். பிலே 1:15 "அவன் என்றென்றைக்கும் உம்முடையவனாயிருக்கும் படிக்கும், இனிமேல் அவன் அடிமையானவனாகவல்ல, அடிமையானவனுக்கு மேலானவனாகவும் பிரியமுள்ள சகோதரனாகவுமிருக்கும்படிக்கும் கொஞ்சங்காலம் உம்மைவிட்டுப் பிரிந்துபோனானாக்கும்."

மேலும், பவுலிடமிருந்து நாம் கற்க வேண்டிய மற்றொரு அருமையான பாடம், தெருவில் இருந்தாலும் எதிர்படுகின்ற அனைவரிடமும் ஆண்டவரைப் பற்றி பேசி இரட்சிப்படைய வழிநடத்தினார். அரசர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு முன்பாக விசாரணைக்கு நிறுத்தினாலும், அங்கேயும் நற்செய்தி சொன்னார். இப்பொழுது பிடித்து சிறையில் அடைத்துவைத்துவிட்டனர், அப்பொழுதும் சக கைதியிடம் கர்த்தரைப் பற்றி போதித்து, இரட்சிக்கப்பட உதவி செய்கின்றார். நாமும் இந்த பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

## ஒநேசிமு

பிலே 1:10 "கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன்."

அடுத்ததாக, பவுல், பிலேமோனுக்கு இந்த கடிதத்தினை எழுதக் காரணமாக (தூண்டுதலாக) இருந்த ஒநேசிமுவைப் பற்றி படிப்போம். பவுல், சிறையில் கைதியாக இருக்கும் போது, ஒநேசிமுவிற்கு சத்தியத்தினை போதித்து, அவனை இரட்சிப்பிற்குள் வழிநடத்தியுள்ளார். ஒநேசிமு கர்த்தருடைய வார்த்தையை கேட்ட பின்பு, அதற்கு தன்னை ஒப்புக்கொடுத்து அடிபணிகின்ற மனதும் செயலும் உடையவராக இருந்தார். கர்த்தருடைய சத்தம் நம் காதுகளில் விழும்போது, நாம் எப்படி இருக்கின்றோம்? நம் மனது எப்படிப்பட்டதாக இருக்கின்றது? உடனே கர்த்தருடைய வார்த்தைக்கு அர்ப்பணித்து அடிபணிகின்றோமா? அல்லது, அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்றும், அதெல்லாம் நடைமுறைக்கு ஒத்துவராது என்றும் சாக்குபோக்கு சொல்லி அலட்சியம் செய்கின்றோமா? சற்று நிதானிப்போம்!

**பிலே 1:11-13** "முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில்லாதவன், இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன். அவனை நான் உம்மிடத்திற்கு அனுப்புகிறேன்; என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக்கொள்ளும். சுவிசேஷத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற எனக்கு ஊழியஞ்செய்யும்படி, உமக்குப் பதிலாக அவனை என்னிடத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றிருந்தேன்."

ஒநேசிமுவின் மனமாற்றமான வாழ்வு நம்மை மெய்சிலிர்க்க வைப்பதாக இருக்கின்றது. ஆம்! தனக்குத் தானே பயனற்ற வாழ்வை வாழ்ந்தவன், அநேகருக்கு பயனுள்ளவனாக தன் வாழ்வை மாற்றிக்கொண்டான். பவுல் அவனை, தன் உள்ளம் போன்றவன் என்கின்றார். கர்த்தர் தாவீதை சொன்னது போலல்லவா இது இருக்கின்றது. 'பிலேமோனே, உனக்கு பதிலாக ஒநேசிமுவை என்னிடத்தில் வைத்துக்கொள்ள விரும்பினேன்' என பவுல் சொல்கின்றார். அதன் பொருள் பிலேமோன் எந்த அளவிற்கு பவுலிற்கு ஊழியத்தில் உதவியாக இருந்திருப்பாரோ, அதே அளவிற்கு ஒநேசிமும் பவுலிற்கு ஊழியத்தில் உதவியாக இருந்திருக்கின்றார் என்பதாக இருக்கின்றது. உண்மையில், இப்படிப்பட்ட மனமாற்றத்தை தான் நம்மிடமும் கர்த்தர் எதிர்ப்பார்ப்பதாக இருக்கும். முன்னே, நமக்கு நாமே பயனற்ற வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தோம். இனி, கர்த்தருக்குள் அநேகருக்கு பயனுள்ள வாழ்வை வாழ வேண்டும்! அதற்காகவே அழைக்கப்பட்டோம், தெரிந்துகொள்ளப்பட்டோம், நீதிமான்களாக்கப்பட்டோம் மற்றும் மகிமைப் படுத்தப்பட்டுள்ளோம் என்பதனை நினைவில்கொள்வோம் **(ரோமர் 8:30; 1 பேதுரு 2:9).**

பிரியமானவர்களே! இந்த கடிதத்தினை பெற்றுக்கொண்ட பிலேமோனிடமிருந்தும், இந்த கடிதத்தினை எழுதிய பவுலிடமிருந்தும், இந்த கடிதம் எழுத காரணமான ஒநேசிமுவிடமிருந்தும் அநேக காரியங்களை கற்றுக்கொண்டோம். கற்றுக்கொண்டவைகளை பயிற்சி செய்வோம்! கர்த்தர் நம்மை தெரிந்தெடுத்த நோக்கத்தினை நிறைவேற்றுவோம்! கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

அன்புடன்,
**–ஆசிரியர்**

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# கிரீடமானவள்

பெண்கள் பகுதி

சகோதரி : பேபி ராஜா



அன்பான சகோதரிகள் அனைவருக்கும், நமக்கு ஜீவகிரீடத்தினை தரப்போகின்ற நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் நீதிமொழிகள் 12ம் அதிகாரம் 4ம் வசனத்தினை குறித்து, குறிப்பாக கிரீடமானவளாக **நீதிமொழி 12:4** "குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டு பண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்."

குணசாலியான பெண் தன் கணவனுக்கு கிரீடமாக இருக்கின்றாள் என பைபிள் போதிக்கின்றது. கிரீடம் என்பது மதிப்பை, அதிகாரத்தினை மற்றும் மகிமையை குறிப்பதாக இருக்கின்றது.

மேலும், பைபிள் குணசாலியான பெண்ணை கண்டுபிடிப்பது அரிது என்றும், அவள் முத்துக்களை விட சிறந்தவள் என்றும் கூறுகின்றது. அதன் பொருள் இந்த உலக பொக்கிஷங்களைவிட அவள் உயர்வானவள். அதாவது இவ்வுலக பொக்கிஷங்கள் அவளிற்கு ஈடாகாது என்றும் சொல்லலாம்.

**நீதிமொழி 31:10** "குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது". மேலும், மனைவியானவள் தன் கணவனிற்கு மகிமையாக இருக்கின்றாள் எனவும் பைபிள் போதிக்கின்றது. **1 கொரி 11:7** "புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ளவேண்டுவதில்லை; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்".

ஆகையால், குணசாலியான பெண்ணாக இருப்பது என்றால் என்ன? பைபிள், யாரை குணசாலியான பெண் என கூறுகின்றது? என்பதனை அறிய வேண்டியது அவசியமாகும்.

நீதிமொழிகள் 31ம் அதிகாரம் குணசாலியான பெண்ணின் குணநலன்களை பற்றி ஒரு நீண்ட பட்டியலை கூறுகின்றது. பரிசுத்த ஆவியானவர், ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என பரிசுத்த சகோதரர்களை கொண்டு சொல்லாமல், இந்த பகுதியில் ஒரு பெண்ணை கொண்டே வெளிப்படுத்தியுள்ளது மிகவும் கவனிக்கத்தக்கது. குணசாலியான பெண்ணை பற்றி இங்கே கூறுவது அரசனாகிய லேமுவேலின் தாய் என்று நாம் குறிப்புகளினாலே அறிகின்றோம். **நீதிமொழி 31:1,2,10** "ராஜாவாகிய லேமுவேலுக்கடுத்த வசனங்கள்; அவன் தாய் அவனுக்குப் போதித்த உபதேசமாவது; என் மகனே, என் கர்ப்பத்தின் குமாரனே, என் பொருத்தனைகளின் புத்திரனே, குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது."

தாய் தன் பிள்ளைக்கு குணசாலியான பெண்ணுக்குரிய அடையாளங்களை வரிசையாக கூறுகின்றார். அதிலிருந்து நாம் சுருக்கமாக அறிவது, அவள் தன் கணவனின் நம்பிக்கைக்குரியவளாக இருக்கின்றாள். அவள் தான் உயிரோடிருக்கும் காலமளவும் தன் கணவனுக்கு நன்மையை மாத்திரம் செய்கின்றாள். தன் குடும்பத்திற்காக கடினமாக உழைக்கின்றாள். தன்னிடம் வேலை செய்பவர்களிடம் கரிசனையாக இருக்கின்றாள். ஏழை எளியவர்களுக்கு மனமுவந்து உதவி செய்கின்றாள். தகுதியான உடைகளை அணிகின்றாள். தகுதியான (நேர்மையான) வேலைகளை செய்து வருமானத்தினை உண்டாக்குகின்றாள். தனது குடும்ப காரியங்களில் கவனமாக இருக்கின்றாள் மற்றும் அழகும் சௌந்தரியமும் வீண் என்பதினை அறிந்து கர்த்தருக்கு பயப்படுகின்றாள். மேலும் அவள் கணவனும், அவளது பிள்ளைகளும் பாராட்டும்படியான ஒரு வாழ்வை வாழுகின்றாள் **(நீதிமொழி 31:10-31).**

பெண்களாகிய நாம் குணசாலியாக அதாவது குணவதியாக இருந்தால், நமது கணவருக்கும், குடும்பத்திற்கும் மகிமையாக இருக்க முடியும் மற்றும் அதினிமித்தம் கர்த்தருடைய நாமத்தினை மகிமைப்படுத்தவும் முடியும்.

# பரிசுத்தவான்களை நேசித்தல்...

பிரியமான வாலிப தம்பி தங்கைகளுக்கு அன்புள்ள ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். அனைவரும் விடுமுறை நாட்களை சந்தோஷமாக கழித்துக் கொண்டிருக்கிறீர்கள் என நம்புகிறேன். இந்த மாதம் பைபிளில் பிலேமோன் புத்தகத்திலிருந்து ஒரு ஆழமான காரியத்தை தியானிப்போம்.

**பிலேமோன் 1:4ல் "எல்லாப் பரிசுத்தவான் களிடத்திலுமுள்ள உம்முடைய அன்பையும்"** என்று எழுதப்பட்டிருப்பதை நாம் பலமுறை வாசித்திருப்போம். அப்படியென்றால் இந்த பிலேமோன் என்கின்ற சகோதரர் எப்படியாக சபை மக்களிடம் தமது அன்பை வெளிப்படுத்தியிருக்கின்றார் என்பதை ஆவியானவர் பதிவு செய்கின்றார். எப்படி சபைகளுக்குள் நடக்கின்ற, தவறுகளை, பாவங்களை இந்த வேதாகமம் சுட்டிக்காட்டி சரி செய்ய முயற்சிக்கிறதோ, அப்படிப்போலவே சபைக்குள் இருந்த இந்த பிலேமோன் என்றும் சகோதரர் செய்த சரியான மேன்மையான குணாதிசியமான பிறரிடம் அன்பு செலுத்துகின்ற பழக்கத்தை வேதாகமம் பாராட்டவும் செய்கின்றது.

அன்பு செலுத்துவது என்பது தனிப்பட்ட தேர்வின் மூலம் தெரிந்து கொள்கின்ற ஒன்றல்ல **(மத் 22:39ல்)** பிறனிடத்தில் அன்பு கூறுவதென்பது கட்டளையாகவே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இங்கே கட்டாயமாக செய்தே ஆக வேண்டும் என்ற இடத்தில் நாம் இருக்கின்றோம். தேவனை நம்புகிற பிள்ளைகள் அனைவரும் இந்த கட்டளையை நிறைவேற்றி ஆக வேண்டும். **(I யோவா 4:12).** நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூறும்போது தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார் என்று சொல்கிறார். பிறரை நேசித்தால் கடவுளும் நம்மோடு இருக்கின்றதாக வேதவசனம் சொல்வதை நாம் மறந்து போய்விடக்கூடாது. **(ரோம 13:8)** நாம் அன்புகூற கடனாளிகளாயிருக்கின்றோம்.

இன்றைய நவநாகரீகம் ஒரு மோசமான, தீமையான கலாச்சாரத்தை வளர்த்து வருகின்றது. அது என்னவென்றால் (Self Love) சுயநலமான அன்பு சுயத்தை பற்றி மட்டும் கவலைப்படு, அடுத்தவர் மீது கவலை கொள்ள தேவையில்லை என்கின்ற ஒரு சுயநலமான உலக போதனையை அநேகர் பின்பற்றி வருகின்றதை நம்மால் பார்க்க முடிகின்றது. இப்படிப்பட்ட சுயநலமான அன்பு மிகவும் ஆபத்தானது. மற்றவர்களை பற்றி கண்டு கொள்ளாத, கவலைப்படாத மனிதர்களாய் உலகம் மாறிவிட்டால் அன்பு காட்டுவதற்கு அக்கறைப்படுவதற்கு இடமில்லாமற் போகும். அவரவர் அவரவருடைய விருப்பத்திற்கு வாழ ஆரம்பிக்கும் பொழுது தேவன் படைத்த இந்த அழகான உலகான வெறுப்பும், பாவமும் நிறைந்ததாக மாறிவிடும். எனவே தான் ஆண்டவராக இயேசு இந்த மண்ணுலகில் வாழ்ந்த நாட்களில் அன்பின் உருவமாக, அன்பினை செயல்படுத்தி காண்பிப்பவராக, பாவ வாழ்வில் இருப்பவர்களுக்கு தம்முடைய நேசக்கரத்தை நீட்டி பாவமன்னிப்பின் மூலம் அழைப்பவராக இருந்தார். இயேசுவால் எப்படி எல்லோரையும் மன்னிக்க முடிந்தது என்று யோசித்து பார்த்தால், அதற்கு நமக்கு கிடைக்கும் பதில் அன்பு என்பது மட்டுமே!

எனவே அன்பு கூறுவோம் தேவ கட்டளையை நிறைவேற்றுவோம்.

– உங்கள் அண்ணன்

**JP**

## சிறுவர்க்கான கேள்விகள்

1. நாம் யாரை மாத்திரம் வணங்க வேண்டாம்?
2. ஆண்டவர் இயேசுவை, பாவம் செய்யும்படி தூண்டியவன் யார்?
3. யோசேப்பு யாரை மன்னித்து, ஏற்றுக்கொண்டார்?
4. தேவாலயம் கட்ட தாவீது ராஜா என்ன செய்தார்?
5. ஜெபம் செய்த முன்பும், பின்பும் அன்னாள் எப்படி இருந்தார்கள்?

பாடம் - 5

# கண்ணாரக் கண்ட சாட்சி

## Eye-Witness Testimony

### ஜனங்களின் நடுவே நடந்த பேச்சு

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த ஜனங்கள், இன்றைய ஜனங்களைப் போலவே பெரும்பாலும் இருந்துள்ளனர். அவர்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து பேச விரும்பினார். அந்நாட்களில் அவர்களுக்கு கணினி இயந்திரம் (கம்ப்யூட்டர்) டிவி மற்றும் வீடியோ போன்ற சாதனங்கள் மக்கள் மனதை திசை திருப்ப இருந்ததில்லையாதலால், இன்றைக்கு நாம் பேசுவதைக் காட்டிலும் அதிகமாகவே பேசியிருக்கக் கூடும். அவர்கள் இயேசுவைப் பற்றிப் பேசினார்கள்.

### மாற்கு

இரண்டாவது சுவிசேஷப் புத்தகமாகிய மாற்குப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் "யோவான் மாற்கு", இயேசு கெத்சமனே தோட்டத்தில் கைது செய்யப் பண்ணப்பட்ட போது, கூட இருந்த "வாலிபன்" என்று கருதப்படுகிறது. மாற்கு, "ஒரு வாலிபன் ஒரு துப்பட்டியை மாத்திரம் தன்மேல் போர்த்துக் கொண்டு அவர் (இயேசு) பின்னே போனான்; அவனைப் பிடித்தார்கள்," என்று எழுதினார். இங்கே குறிப்பிடப்பட்ட ''வாலிபன்'' மாற்றாக இருந்திருப்பானேயால், அவன் ஒரு கண்ணாரக் கண்ட சாட்சி.

ஏறத்தாழ கி.பி. 125-ல், பாபியா என்னும் கலை முன்னோடி ஒருவர், "மாற்கு எந்த தவறும் செய்யவில்லை" என்றும், பேதுரு இயேசுவைக் குறித்த ஒரு கண்ணாரக் கண்ட சாட்சியம் என எந்தவொரு "தவறான கருத்தையும்" உட்புகுத்தி எழுதியிருக்க மாட்டார்" என்று சொன்னார்.

இரேனியுவின் கூற்றுப்படி, "மாற்கு, சீமோன் பேதுரு குறித்து விளக்கமளித்தவனுமாகிய அவன், பேதுரு பிரசங்கித்தவைகளை எழுதி நமக்குக் கொடுத்திருக்கிறார்", கி.பி. 180ல் அவர் பேதுருவின் கண்ணாரக் கண்ட சாட்சியத்தை இரேனியு குறிப்பிட்டுள்ளார்.

### லூக்கா

மூன்றாவது நற்செய்தி புத்தகத்தை எழுதிய ஆசிரியர் லூக்கா, இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு ஒரு கண்கண்ட சாட்சியல்ல, எப்படியிருப்பினும், அவர் மிக உயர்ந்த பண்பாற்றலைக் கொண்டிருந்த ஒரு வரலாற்று ஆசிரியராதலால், மற்றவர்களின் கண்கண்ட சாட்சியங்களை அறிவிக்கிறார்.

### தனது சுவிசேஷ புத்தகத்தின் முகவுரையில், லூக்கா எழுதியதாவது

"மகா கனம் பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை ஆரம்ப முதல் கண்ணாரக் கண்டு, வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சாத்திரம் எழுத அநேகம் பேர் ஏற்பட்டபடியினால், ஆதி முதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று" (லூக்கா 1:1-4).

லூக்கா கொடுக்கிற விவரத்திலிருந்து இயேசுவின் பிறப்பு மற்றும் இளம்பிராய வளர்ச்சி ஆகியவை குறித்து அவரது தாய் மரியாளிடத்தில் விசாரித்து அறிந்திருக்கிறார் என்று நிச்சயமாகத் தெரிகிறது. இயேசுவின் வருகை குறித்து காபிரியேல் தூதன் அறிவிக்கும் போது, அவள் அங்கே இருந்தாள். அவள் கருத்தரிக்கையில் அங்கே இருந்தாள். இயேசு பிறந்து வைக்கோல் மீது கிடத்தப்பட்டிருந்த போதும், மேய்ப்பவர்கள் குழந்தை இயேசுவை முன்னணையில் வந்து பார்க்கிறபோதும், அவள் அங்கே இருந்தாள். இயேசு விருத்தசேதனம் பண்ணப்பட்ட போதும், எருசலேம் தேவாலயத்தில் பிரதிஷ்டை பண்ணப்பட்டபோதும் மரியாள் இருந்தாள். பஸ்கா பண்டிகையில் தன் குடும்பமாக சிறுவனாகிய இயேசு கலந்துகொண்ட போதும், தேவாலயத்தில் போதகமார்களோடு இயேசு கேள்விகள் கேட்கவும், பதில் சொல்லும் போதும் அவள் ஆச்சரியப்பட்டவளாய் அங்கே இருந்தாள். இயேசுவின் வாழ்வின் பெரும்பகுதி அவள் அவருடன் இருந்தாள். இவைகளுக்கு லூக்காவே கண்கண்ட சாட்சியாயிருக்கவில்லையெனினும், இயேசுவின்

தாயாகிய மரியாள், இயேசுவின் சகோதரர்களாகிய யாக்கோபு, யூதா, மகதலேனா மரியாள், மற்றொரு மரியாள், சலோமி, இயேசுவோடு பயணம் பண்ணின வெறுமையாயிருந்த கல்லறையை சாட்சியிட்ட மற்றவர்கள் ஆகிய அனைவரின் கண்கண்ட சாட்சியங்களை உண்மையாய் அவர் எழுதினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, லூக்கா, பவுல் அப்போஸ்தலனுடன் பயணம் பண்ணின "பிரியமான வைத்தியன்" லூக்கா அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், அவரது கண்கண்ட சாட்சியங்களே மிக அதிகமாக எழுதப்பட்டுள்ளன. பின்வரும் வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள தன்னிலைப் பெயர் சொற்கள் அனைத்துமே அவரைக் குறிப்பிடுகின்றன, அப் 16:6-40; 20:6-38; 21:1-5; 27:1-44; மற்றும் 28:1-31. லூக்கா, பவுலுடன் இரண்டு சுவிசேஷப் பயணங்களில் சென்றவர்; ரோமாபுரிக்கு பவுலோடு கப்பல் பயணத்தில் சென்றவர்; சிறை வைக்கப்பட்டிருக்கையில் அவருக்கு பணிவிடை செய்தவர். மறுபடியும் தமக்குப் பட்டணத்துக்கு போய்க் கொண்டிருக்கையில் வழியிலே இயேசு தனக்கு தரிசனமானதை பவுல் சொல்லக் கேட்டவர் லூக்கா.

இரேனியு, "லூக்கா, பவுலை பின்பற்றியவர், தனது ஆசிரியரின் சுவிசேஷ பிரசங்கங்களை புத்தகமாக வெளியிட்டார்'' என்று எழுதுகிறார். பவுல் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு கண்ணாரக் கண்ட சாட்சி, பவுலின் கண்கண்ட அந்த சாட்சியததை லூக்கா எழுதினார்.

## சுவிசேஷங்கள் கட்டுக்கதைகளால் மூடப்பட்டவைகளா?

பெரும்பாலான நிபுணர்கள் மாற்கு சுவிசேஷப் புத்தகம் 70-ம் ஆண்டுகளில் எழுதப்பட்டதாகவும், 80-ம் ஆண்டுகளில் எழுதப்பட்டதாகவும் கூறுகின்றனர். கடவுள் நம்பிக்கையற்றவர் சுவிசேஷப் புத்தகங்கள் எழுதப்பட்ட நேரத்தில், வரலாற்று உண்மைகளெல்லாம் கட்டுக்கதைகளால் மூடி மறைக்கப்பட்டிருந்தது என்கின்றனர்.

லூக்கா எழுதின புத்தகம் கி.பி. 80க்கு வெகு காலத்துக்கு முன்பாகவே எழுதப்பட்டது என நம்புவதற்கு நல்ல காரணமும் இருக்கிறது. பவுல் ரோமாபுரி வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டதுடன் அப்போஸ்தலர் நடபடிகள் முடிவு பெறுகிறது. இது அப்போஸ்தலர் நடபடிகள் கி.பி. 62 வாக்கில், பவுல் விடுதலை பெற்ற நேரத்தில் எழுதப்பட்டது என


### வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

G Pay

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.


ஆலோசிக்க வைக்கிறது. அப்போஸ்தலர் நடபடிகள் இரண்டாவது பிரபந்தம் என்பதால், இரண்டு பாகத்தில், லூக்கா சுவிசேஷம் கி.பி. 62க்கு முன்பாகவே (முதலாம் பிரபந்தம்) எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மாற்குப் புத்தகம் தான் சுவிசேஷங்களிலேயே முதலாவது எழுதப்பட்ட புத்தகம் என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. கி.பி. 30களில் மாற்கு எழுதியிருப்பாரானால், அவருடைய புத்தகம் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்தெழுந்து முப்பது வருடங்களில் எழுதப்பட்டதாகக் கொள்ளலாம். எழுதப்பட்ட பதிவேடுகள் சரியென எடுத்துக் கொள்வதற்கு இன்னமும் ஏராளமான சாட்சியங்கள் இருந்தன. ஆதலால், புனைக்கதைகளையும் கட்டுக்கதைகளையும் சேர்த்து உண்மையை திரித்துக் கூறியிருந்தாலும் கூட அந்த சாட்சியங்கள் போதுமானவை.

சுவிசேஷச் செய்திகளெல்லாம் எழுதப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன் வாய்மொழியாகத்தான் பிரசங்கிக்கவும் போதிக்கவும் செய்தனர் என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும்.

- அடுத்த இதழில் தொடரும்...

# தூய்மையாக வாழுங்கள்

கடவுளுக்கு பிரியமான குட்டி பிள்ளைகளா, நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நன்றாய் இருக்கிறீர்களா? இந்த மாதம் தூய்மையாக வாழ்வதைப் பற்றி நாம் பைபிளிலிருந்து கற்றுக்கொள்ளலாமா?

பிள்ளைகளா, ஆண்டவர் இயேசு, திருமுழுக்கு எடுத்த பிறகு, நாற்பது நாள் சாப்பாடு இல்லாமல் இருந்தார். அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா? மிகவும் பசி எடுத்தது, அப்ப சாத்தான், இயேசுகிட்ட வந்து, இயேசுவே இயேசுவே உங்களுக்கு ரொம்ப பசிக்குதா? என்று கேட்டான், இயேசுவும் ஆம் என்றார். உடனே பிசாசு என்ன சொன்னான் தெரியுமா? நீர்தான் கடவுளின் மகன்தானே இந்த கல்லை அப்பமாக்கி சாப்பிடும் என்றான், இயேசு சாத்தான் சொன்னதை கேட்கவில்லை.

பாருங்க பிள்ளைகளா! நம்முடைய ஆண்டவர் இயேசு சாப்பாட்டில், தூய்மையாக இருந்தார். உங்க உடலை கெடுக்கும் எந்த உணவுபொருளையும் சாப்பிடக்கூடாது.

மறுபடியும் சாத்தான், ஆண்டவர் இயேசுவிடம் வந்து, அவரை தேவாலயத்து உப்பரிக்கையின்மேல் அழைத்துக்கொண்டு போய் நிறுத்தி, நீங்க மேலேயிருந்து கீழே குதிங்க உங்களை தேவதூதர்கள் காப்பாற்றுவார்கள் என்று அவருக்குள் பெருமை வரும்படி செய்தான். ஆனால் இயேசு பெருமைக்கு இடம் கொடுக்கவில்லை, தன் மனதை தூய்மையாக வைத்துக்கொண்டார்.

நீங்களும் கடவுள் சின்ன உயர்வு கொடுத்தா்னா, அதாவது பரீட்சையில் நல்ல மார்க் வாங்கியிருக்கலாம், உயர்ந்த பொருள் கிடைத்திருந்தால் உங்கள் மனதில் பெருமை வரக்கூடாது. இவற்றை கர்த்தர் கொடுத்தார் என்று தாழ்மையாயிருந்து மனதையும் தூய்மையாய் வைத்துக்கொள்ளனும்.

பின்னும் சாத்தான், ஆண்டவர் இயேசுவை உயர்ந்த மலையின்மேல் அழைத்துக்



கொண்டுபோய், அங்கு பாருங்க, நல்ல வீடு, பட்டணம் என்று இந்த உலகத்தை காட்டி, என்னை மாத்திரம் நீங்க வணங்கினால், இவை எல்லாவற்றையும் உங்களுக்கு நான் தருவேன் என்றான்.

இயேசு என்ன செய்தார் தெரியுமா? பரலோகத்தில் இருக்கும் கடவுளை மாத்திரம் தான் அனைவரும் வணங்க வேண்டும் என்றார். மேலும், அது பைபிளில் எழுதப்பட்டுள்ளதையும் சுட்டிகாண்பித்தார். கடவுளை தொழுகை செய்யும் (வணங்கும்) விஷயத்திலும், ஆண்டவர் இயேசு தூய்மையை காண்பித்தார்.

நீங்களும் கூட உங்களுக்கு சாக்லேட் தரேன், சொந்தக்காரர்கள் வீட்டுக்குப் போகலாம். விளையாட்டு பொருள் வாங்கித்தரேன் என்று உண்மையான கடவுளை தேட, பைபிள் படிக்க தடை வந்தால் எல்லாவற்றையும் இயேசுபோல, தூக்கி போட்டுவிட்டு சர்ச்சுக்கு (சபைக்கு) முக்கியத்துவம் கொடுக்கனும் செய்வீர்களா!

இயேசு ஆண்டவர் பார்த்தீர்களா! கண்களில், மனதில், சரீரத்தில் தூய்மையாய் இருந்தார். நீங்களும் அப்படி இருப்பீர்களா! கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் :** 1 பேதுரு 1:15 "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்".

**— அன்பு ஏசுதாஸ்**



ஹாய் குட்டீஸ் ! உங்கள் எல்லாருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே வாழ்த்துக்கள் மற்றும் ஸ்தோத்திரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாதம் வேதாகமத்திலிருந்து சகோதர சிநேகத்தை பற்றி கற்றுக்கொள்ளப் போகிறோம்.

''சகோதரரை சிநேகியுங்கள்'' ஆமாம் செல்லங்களா? பொதுவாகவே, அண்ணன், அக்கா, தம்பி, தங்கைகள் என இருக்கும்பொழுது, ஒருவர் மீது மற்றொருவருக்கு கோபம், வெறுப்பு வந்து, அதனால் சண்டைகளும், பிரச்சனைகளும் வருவதற்கு காரணமாகிறது, வேதாகமம் "உன்னைப் போல பிறரையும் நேசி" என்று சொல்கிறது நாம் மற்றவர்களை நேசிக்க தயாராக இருக்கிறோம். ஆனால் நம் உடன் பிறந்தவர்கள் செய்கிற காரியங்களை ஒருபோதும் அமைதியாக ஏற்றுக்கொள்வதில்லை. இதற்கு உதாரணமாக இருந்த ஒரு சம்பவத்தை வேதாகமத்திலிருந்துப் பார்க்கலாம்.

பைபிளில் யாக்கோபு என்பவருக்கு 12 குமாரர்கள் இருந்தார்கள். (குமாரர் - மகன்) இவர்களில் யாக்கோபுக்கு யோசேப்பு என்ற மகனை தான் ரொம்ப ரொம்ப பிடிக்கும், யோசேப்புக்காக, நிறைய வண்ணம் இருக்கிற உடையெல்லாம்,அந்த அப்பா செய்துகொடுத்தாரு.

இதை பார்த்த 11 சகோதரர்களுக்கு கோபம் வந்திருச்சு, அப்பாவுக்கு யோசேப்பை மட்டும்தான் பிடிக்குது என்று ஒருவரோடொருவர் பேசி, யோசேப்பைக் கொலை செய்ய நேரம் தேடிக்கொண்டிருந்தனர். அப்போது ஒரு நாள் அந்த 11 அண்ணன்களும், ஆடுகளை மேய்க்கச் சென்று வெகு நேரமாகி வீடு திரும்பாதக் காரணத்தினால் அந்த அப்பா யோசேப்பைக் கூப்பிட்டு போய் உன் அண்ணன்கள் எப்படி இருக்கிறார்கள் என்று நலம் விசாரித்து வா என்று அனுப்பினார்.

நீண்ட தூரம் நடந்து பிரயாணப்பட்டு இறுதியில் தன்னுடைய அண்ணன்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தான் யோசேப்பு. ஆனால், அவர்கள், அவனை, எகிப்தியர்களுக்கு விற்று விற்றார்கள்.

எகிப்துக்கு அடிமையாக சென்றாலும் அவனுடைய நல்ல குணத்தினால் ராஜாவுக்கு சமமான இடத்தில் உயர் அதிகாரியாக இருந்தான். அப்போது கொடிய பஞ்சம் (உணவில்லாமல் துன்பப்படுதல்) ஏற்பட்டது. எல்லா ஊர்களில் உள்ளவர்களும் இந்த யோசேப்பிடம் வந்து தானியங்களை வாங்கிக்கொண்டு சென்றனர்.

இதே வேளையில் யாக்கோபு மற்றும் அவருடைய 11 மகன்களும் பஞ்சத்தால் கஷ்டப்பட்டு, எகிப்துக்கு தானியங்களை வாங்கச் சென்றனர். யோசேப்பு தன் சகோதரர்களை அடையாளம் கண்டு கொண்டான். ஆனால் அந்த 11 பேருக்கும், யோசேப்பை அடையாளம் தெரியவில்லை.

அப்போது யோசேப்பு தன் சகோதரர்களுடைய தவறை மன்னித்து அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு உணவு வழங்கினார்.

பார்த்தீங்களா! செல்லங்களா! யோசேப்பைக் கொன்றுபோட திட்டம் தீட்டிய சகோதரர்களை, பழி வாங்கவேண்டும் என்று நினைத்திருந்தால் ஒரு நிமிடத்தில் முடிந்திருக்கும்! ஆனால், அவன் அப்படிச் செய்யாமல் அவர்களை மன்னித்து ஏற்றுக்கொண்டான்.

சகோதரர்களை இந்த யோசேப்பைப் போல நாமும் மன்னிக்கிறவர்களாக இருப்போம். சகோதரர்களை சிநேகிக்க முயற்சியே இந்த நற்குணத்தை வளர்த்துக்கொள்வோம்.

**மனப்பாட வசனம் : எபிரேயர் 13:1** "சகோதர சிநேகரம் நிலைத்திருக்ககடவது".

– ஏஞ்சல்

# கர்த்தரை நேசியுங்கள்

ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். வேதாகமத்தில் தாவீதுன்னு ஒரு ராஜா பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறை அவரைப்பற்றி தான் நாம் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

இஸ்ரவேல் நாட்டிலுள்ள பெத்லகேம் தான் இந்த தாவீது ராஜாவுக்கு சொந்த ஊர். இவருடைய தகப்பன் பெயர் ஈசாய். இவர்தான் கடைசி மகன். இவர் தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கிற வேலை செய்து கொண்டு வந்தார். இவருக்கு சின்ன வயதிலிருந்தே தேவன்மீது அளவுக்கடந்த அன்பு இருந்தது. அதனால் தேவனை துதித்து எந்நேரமும் பாட்டு பாடிக் கொண்டேயிருப்பார். இவர் தேவன் மீது வைத்திருந்த அன்பினால் இவர் வாழ்க்கையில் என்ன என்ன நடந்தது என்று பார்க்கலாமா?

ஒரு முறை இந்த தாவீது அண்ணன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு சிங்கம் வந்தது. அந்த சிங்கத்துடைய வாயை கிழிச்சு போட்டு அதை கொன்று போட்டார். இன்னொரு முறை ஒரு கரடி வந்தது. அதையும் அடிச்சு கொன்று போட்டார். அதுமட்டுமல்ல கோலியாத் என்ற இராட்சதனை பார்த்து ஒரு நாடே நடுங்கினபோது இந்த அண்ணன் மட்டும் ஒரு சின்ன கூழாங்கல்லை வைத்து அவனை கொன்று போட்டான்.

இவருடன் பிறந்த அண்ணன்கள் மொத்தம் 6 பேர் ஆனால் இஸ்ரவேல் தேசத்தின் மீது ராஜாவாகும்படி தேவன் தெரிந்துகொண்டது இவரைத்தான். இவர்தான் தேசத்தின் அடுத்த ராஜாவாக போகிறாரென்று தெரிந்துகொண்டு சவுல்ராஜா இவரைக் கொன்று போடும்படி பலமுறை முயற்சி செய்கிறார். ஆனால் சவுல் ராஜாவால் இந்த தாவீது அண்ணனை ஒன்றுமே செய்ய முடியவில்லை.



இந்த தாவீது அண்ணன் ராஜாவான பிறகு ஒவ்வொரு முறையும் எதிரி நாடுகளோடு போர் செய்ய போகிறதற்கு முன்னே தேவனிடத்தில் ஜெபத்திலே உத்தரவு கேட்டுதான் போவார்.

இவர் கைகளால் தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட மிகவும் ஆசைப்பட்டார். அதற்கு தேவன் நீ எனக்கு ஆலயம் கட்ட முடியாது என்று சொல்லிவிட்டா. ஆனால் தாவீது சோர்ந்து போகாமல் தேவ ஆலயத்தை கட்டுவதற்கு தேவையான எல்லா பொருட்களையும் சேர்த்து வைத்துதான் இறந்து போனார்.

பார்த்தீங்களா குட்டீஸ்! இந்த தாவீது ராஜாவுக்கு தேவன் மேலிருந்த அன்பை. அவர் தேவன் மீது வைத்த அளவுக்கு அதிகமான அன்பு அவருடைய வாழ்க்கையில் எவ்வளவு பெரிய பெரிய காரியங்களை செய்திருக்கிறது. நாமும் தாவீதை போல் தேவன்மீது அன்பு வைத்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மனப்பாட வசனம்: மத்தேயு 22:37** "இயேசு அவனை நோக்கி; உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக.

**– குயினி பிரதீப்**

# கர்த்தரை நம்புங்கள்

எனக்கன்பான மழலை செல்லங்களுக்கு, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் அன்பின் வாழ்த்துக்கள். எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்? பள்ளிக்கூடம் ஆரம்பித்துவிட்டதா? புதிய வகுப்பறை, புதிய பள்ளி, புதிய நண்பர்கள் என நிறைய காரியங்கள் புதிதாக கிடைக்கும் அல்லவா? உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கின்றோம்.

இந்த மகிழ்ச்சியுடன் இந்த மாதம், பைபிளில் சொல்லப்பட்டுள்ள, ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு உண்மை சம்பவத்திலிருந்து ஒரு அருமையான காரியத்தினை நாம் கற்றுக்கொள்ளலாமா?

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பாக, இஸ்ரவேல் நாட்டிலே, எப்பிராயீம் மலைத்தேசத்திலிருக்கிற சோப்பீம் என்ற ஊரிலே எல்க்கானா என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு இரண்டு மனைவிகள் ஒருவர் பெயர் பெனின்னாள், இன்னொருவர் பெயர் அன்னாள், இரண்டு திருமணம் செய்வது பாவம் தான். ஆனால் அந்த நாட்களில் அது நடைமுறை வழக்கத்தில் இல்லை. பெனின்னாள் என்பவருக்கு குழந்தைகள் இருந்தது. அன்னாளுக்கு குழந்தைகள் இல்லை. அதனால் பெனின்னாள் அன்னாளை மிகவும் கேவலமாக பேசி வேதனைப்படுத்துவாள்.

ஒரு முறை பெனின்னாள் அன்னாளை வேதனைப்படுத்திய போது, அன்னாள் என்ன செய்தாள் தெரியுமா? ஆசரிப்பு கூடாரத்தினை நோக்கி ஓடினாள். அந்த நாட்களில் ஆசரிப்பு கூடாரம் தான் தேவாலயம். அங்கே சென்று மிகவும் மனம் கசந்து அழுதாள். கர்த்தாவே நீங்க எனக்கு ஒரு ஆண் பிள்ளை கொடுத்தீங்கள் என்றாள் அவனை உங்க ஊழியத்திற்கு காணிக்கையாக கொடுத்துவிடுவேன் என பொருத்தனை செய்து கண்ணீரோடே ஜெபம் செய்தாள். அதனை அறிந்து ஆசாரியனாகிய ஏலி, நீ சமாதானத்துடன் போ, கர்த்தர் நீ கேட்ட ஜெபத்தின்படி உனக்கு உதவி செய்வார் என நம்பிக்கை கூறி அனுப்பினார்.



ஜெபம் செய்வதற்கு முன்பு வேதனையாக இருந்த அன்னாள், அதன்பின்பு துக்க முகத்துடன் இருக்கவில்லை. அவள் நம்பிக்கையுடன் ஜெபித்தாள். கர்த்தர் அவள் விண்ணப்பத்தினை கேட்டு, அவள் வேண்டிக்கொண்டபடி அவளுக்கு ஒரு ஆண் குழந்தையை கொடுத்தார். அந்த குழந்தை யார என்று தெரியுமா? அந்த குழந்தை தான், பின்னாளில் மிகப்பெரிய தீர்க்கதரிசியான சாமுவேல்.

செல்லங்களே, கர்த்தரை எப்பொழுதும் நம்புங்கள், நம்பிக்கையுடன் விண்ணப்பம் செய்யுங்கள். கர்த்தர் அவருக்கு சித்தமானபடி நமக்கு உதவி செய்வார். நீங்கள் அவரை நம்பி, ஜெபிக்கிற பிள்ளைகளா நடங்கள். அவர் உங்களை ஜெயிக்கிற பிள்ளைகளா இருக்க செய்வார்.

**மனப்பாட வசனம் :** ***சங்கீதம் 62:8*** "ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமூகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார் (சேலா).

— பிரியா ஆண்டனி

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. ஹானாஜோதி - மதுரை
2. M. ராஜா - கரூர்
3. J. நவீன் பீட்டர் - மதுரை
4. J. கிறிஸ்டினா ஜாய்ஸ் - மதுரை
5. S. சாராள் - மதுரை
6. M. ஜோனா - கரூர்
7. A. கார்பஸ் பிலேமோன் - மதுரை

## ஜூன் மாத கேள்விகள்

1. பிலேமோன் மனைவி மற்றும் மகன் பெயர் என்ன?
2. பிலேமோன் யாரிடத்தில் அன்பாக இருந்ததாக பவுல் கேள்விபட்டார்?
3. எப்படிப்பட்ட பலிகளின் மேல் பிதா பிரியமாயிருக்கிறார்?
4. நீதிபரராகிய இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவிடத்தில் செய்வது என்ன?
5. தன் புருஷனுக்கு கிரீடமாயிருப்பவள் யார்?
6. யாருடைய விலை முத்துக்களை பார்க்கிலும் உயர்ந்தது?
7. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் யார் நமக்குள் நிலைத்திருப்பார்?
8. யாரை நியாயபிரமாணத்தை நிறைவேற்றுகிறான் என பவுல் கூறுகின்றார்?
9. திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் செய்ய வேண்டியது என்ன?
10. பிலேமோன் புத்தகம் எழுதப்பட்ட காலம் என்ன?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-07-2023**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. சங்கீதம் 128:2 | 6. ரோமர் 8:26 |
| 2. சங்கீதம் 121:4 | 7. யாக்கோபு 4:5 |
| 3. மாற்கு 6:31 | 8. மத்தேயு 13:25 |
| 4. மத்தேயு 9:36 | 9. 2 தெச 3:10 |
| 5. 1 யோவான் 2:1 | 10. ஆதியாகமம் 2:15 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
2. M. ஸ்டெல்லா ஜெபகுமார் – நெல்லை
3. Mrs. E. ஈஸ்வரி முருகன் – கரூர்
4. Mrs. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
5. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
6. Mrs. மேரிராஜ் – மதுரை
7. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
8. Mrs. ஹெப்ஸிமா தாமஸ் – படப்பை
9. Mrs. ஹெலன் திலக் – தூத்துக்குடி
10. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
11. Mrs. செல்வமணி – சேலம்
12. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
13. N. ஜான் செல்லையா – மதுரை
14. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
15. Mrs. D.J. அன்பு சுதந்திரம் – நெல்லை
16. J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் – நெல்லை
17. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
18. Mrs. சுந்தரபாய் வில்லியம் – புதுக்கோட்டை
19. Mrs. A. இமால்டா சுந்தர்சிங் – ஈரோடு
20. M. விக்னேஷ் – அரக்கோணம்
21. Mrs. R. சரோஜா – தென்கலம்
22. Mrs. மீனாள் – மூலனூர்
23. A. லலிதா – புதுக்கோட்டை
24. Mrs. ஜெமி நல்லையா – கோவை
25. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
26. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
27. S. காந்த மனோகரன் – திருச்சி
28. S. டேவிட் சாந்தகுமார் – வல்லம்
29. Mrs. R.P. டேவிட் – சேலம்
30. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
31. Mrs. S. பாக்கியராஜம் – மதுரை
32. J. ஜான்ஸி – ஆனைமலை
33. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
34. P.S. ருக்மணி – கோபி
35. J. விஜய் – மதுரை
36. Mrs. S. சூரியா சௌந்தர்பாண்டி – மதுரை
37. Mrs. ஆனி விக்டோரியா – சென்னை
38. K. ராஜா – அந்தியூர்
39. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
40. Mrs. ஹெலன் திலக் – புதுக்கோட்டை
41. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
42. P. ஷைனி – காங்கேயம்
43. S. ஐசுவரியா – காங்கேயம்
44. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
45. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
46. S. ஐசுவரியா – காங்கேயம்
47. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
48. A. லலிதா – புதுக்கோட்டை
49. Mr. டேவிட் சாந்தகுமார் – தென்காசி

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **Arasaradi, Madurai**
**Printed & Published by P.C. PHILEMON RAJAH**
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th June 2023
Posted at Arasaradi HPO on 10th 11th June 2023

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH







AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : biblecourseindia@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To